NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 29 September 2015

# தனியார் வீடுகளின் மறுவிற்பனை விலையில் சரிவு

சிங்கப்பூரில் கொண்டோமினியம், அடுக்குமாடி வீடுகளின் மறுவிற்பனை விலை முந்தைய மாதத்துடன் ஒப்பிடு கையில் ஆகஸ்ட் மாதத்தில் 0.6 விழுக்காடு குறைந்தது என்று சிங்கப் பூர் குடியிருப்பு விலைக் குறியீடு (எஸ்ஆர்பிஐ) தெரிவித்தது.

இந்த விலைக் குறியீட்டை சிங்கப் பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் சொத்து ஆய்வுக் கழகம் மதிப்பிட்டு உள்ளது.

வீடுகள் அமைந்த இடத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டால் மத்திய வட்டாரத்தில் சிறிய வீடுகளைத் தவிர பெரும்பாலான வீடுகளின் விலைகள் முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.7 குறைந்தன.

ஆனால் கடந்த ஜூலையில் அதற்கு முந்தைய ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் அது 0.3 விழுக்காடு கூடியது. மத்திய வட்டாரம் அல்லாத பகுதிகளில் ஜூலையில் 0.7 விழுக்காடு சரிவுக்குப் பிறகு ஆகஸ்ட் டில் 0.5 விழுக்காடு குறைந்தது.

ஆகஸ்ட் மாதத்தில் 'ஷூபாக்ஸ்' எனப்படும் 506 சதுர அடி பரப்பளவுக் கொண்ட சிறிய வீடுகளின் விலை களில் எந்த மாற்றமும் இல்லை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.